

சென்னை, கீழ்ப்பாக்கம், பெரியார் ஈ.வெ.ரா. நெடுஞ்சாலை, என். வி. நடராசன் மாளிகை, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய அலுவலகத்தில் நேற்று (27.08.2024) கூட்டுறவுத் துறை அமைச்சர் கே. ஆர். பெரியகருப்பன் தலைமையில் கூட்டுறவுத் துறையின் கூடுதல் பதிவாளர்கள் மற்றும் துணைப் பதிவாளர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.ஜெ. ராதாகிருஷ்ணன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர்.ந.சுப்பையன், கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) திருமதி.ப.காயத்ரி கிருஷ்ணன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் .பி.மூர்த்தி. மதுரை மாவட்டம் கிழக்கு ஊராட்சி ஒன்றியம் யா.ஒத்தக்கடை அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறை சார்பாக மாணவியர்களுக்கு அரசின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் . மா.சௌ. சங்கீதா, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் . ஆ. வெங்கடேசன் , மாவட்ட ஊராட்சித்தலைவர் . சூரியகலா கலாநிதி, கிழக்கு ஊராட்சி ஒன்றிய தலைவர் . மணிமேகலை மாவட்ட கவுன்சிலர் வடிவேல் முருகன், ஊராட்சி மன்ற தலைவர் முருகேஸ்வரி சரவணன் ஊராட்சி மன்ற தலைவர் அண்ணாமலை ஆகியோர் உடன் உள்ளனர்.

### 2026 தேர்தலில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள

# 6 சட்டமன்றத் தொகுதிகளிலும் வெற்றி பெற கடினமாக உழைப்போம் !

## புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம் ! அமைச்சர் எஸ்.ரகுபதி அறிவிப்பு !

புதுக்கோட்டை, ஆக.28–

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் 26.8.2024 திங்கட்கிழமை அறந்தாங்கி கே.வி.எஸ். திருமண மகாலில் மாவட்ட அவை தலைவர் அ.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது.

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்கள்.

அறந்தாங்கி நகர கழக செயலாளர் க.ராஜேந்திரன் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வுகளில் மாவட்ட துணைச் செயலாளர்கள் ஞான.இளங்கோவன், அடைக்கலம், ஸ்ரீதேவி அண்ணாதுரை, மாவட்டப் பொருளாளர் அபுதாஹீர், தீர்மானக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் சி.ராமநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் அறந்தாங்கி நகராட்சி தலைவர் இரா. ஆனந்த், ஆர்.ஆர்.கே.கலைமணி, பொதுக்குழு உறுப்பினர்கள் சீனி. பழனியப்பன், கே.எம்.சுப்ரமணியன், கலைவாணி சுப்பிரமணியன், ஆர். வி.செல்வம், வீரய்யா, ஒன்றியச் செயலாளர்கள் உதயம் சண்முகம், பொன் ராமலிங்கம், வே.பொன்துரை, பொன். கணேசன், சக்தி ராமசாமி, எஸ்.எம். சீனியார், அ.அடைக்கலமணி, டி.தங்கமணி, அரு.வடிவேல், கே.எஸ்.ரவி, குமார் (எ) துரைக்கண்ணு, அழகு சிதம்பரம், இரா.கணேசன், வி.ஆர். இளையராஜா, பேரூர் கழகச் செயலாளர்கள் அ.அழகப்பன், கே.சி.சிவக்குமார், ஆ.பழனிக்குமார், நாசர் (எ) செந்தில்குமார், ஒன்றிய பெருந்தலைவர்கள் மகேஸ்வரி சண்முகநாதன், மேகலா முத்து, மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தி.முத்து, ஆ.கலைச்செல்வன், பாத்திமா பீவி, தேவி, ஹரி விமலாதி, கருணாகரன், குமரேசன், இரா.



மேகநாதன், கே.ஆர்.ராமசாமி, ரம்யா பாலு, அப்துல் ஹமீது, டாக்டர் சுதர்சன், சக்திவேல், முத்துக்குமார், எம்.ஜி (எ) ராமச்சந்திரன், சர்வேயர் நடேசன், இரா.தமிழ்ராசு, நசுருதீன், அருண் சேகர், முகம்மது ரபீக், இளையராஜா, சரிகா மேகநாதன், பாக்கியலட்சுமி கார்த்திகேயன், நஜிமுதீன், சிவ.பால இளங்கோ, வி.சி.செல்வம், கைகுறிச்சி செல்வம், பழனி தேவா, ஆர்ட்டிஸ்ட் முருகேசன், அண்ணாத்துரை, க.ச.த. தென்னாக, பாஸ்கர், கே.வி.சுப்பையா, கே.வி.எஸ்.ஏ.மோகன், ரெத்தினவேல், மணிமொழியன்.

மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், பொது உறுப்பினர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணிராஜன் நன்றி கூறினார்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானம்.1

தலைமைக் கழக அறிவுறுத்தலின்படி புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக பொது உறுப்பினர் கூட்டம் பொது உறுப்பினருடைய கருத்துகளை, அறிவுறைகளை மற்றும் விளக்கங்களை பெறுவதற்காக கூட்டப்பட்டது.

தீர்மானம் 2

பொது உறுப்பினர் தெரிவித்த ஆலோசனைகள், அவர்கள் அளித்த மனுக்கள், கோரிக்கைகள் இவற்றில் தேவையானவற்றை தலைமைக்கழகத்தின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய முடிவு எடுப்பது என்று தீர்மானிக்கப்படுகிறது.

தீர்மானம்3

2026ல் கழக தலைவர் நிர்ணயித்த 200 என்ற இலக்கை அடைய புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளிலும் வெற்றி பெற கடினமாக உழைத்து தலைவர் தளபதியின் நல்லாட்சியில் சீர்மிகு திட்டங்களை வீடுகள் தோறும் கொண்டு செல்ல முனைப்புடன் பாடுபடுவது என தீர்மானிக்கப்படுகிறது.

தீர்மானம் 4

எதிர்வரும் கழக நிகழ்ச்சிகள் அனைத்தையும் 2026 சட்டமன்ற தேர்தல் களத்திற்கு பயன்பெறும் வகையில் நிகழ்ச்சிகள் அமைத்து சிறப்போடு செயல்படுவது என தீர்மானிக்கப்படுகிறது.

தீர்மானம் 5

234 லட்சியம் 200 நிச்சயம் இதுவே 2026ன் தாரக மந்திரம் என தொண்டர்களால் முழங்கப்படுவது என முடிவு செய்யப்பட்டது. இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



நெல்லை கிழக்கு மாவட்டம் களக்காடு வடக்கு ஒன்றியம் சார்பில் மலையடி கிளையில் கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் மூன்றாண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டம் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் வழிகாட்டுதலின்படி ஒன்றிய செயலாளர் செல்வ கருணாநிதி தலைமையில் துணை செயலாளர் அருள்ஜோதி,தச்சன் குளம் கிளை செயலாளர் வெள்ளத்துரை ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்திராநகர் கிளை செயலாளர் முருகன் வரவேற்புரையாற்றினார்.கழக பேச்சாளர் ராவணன் உரையாற்றினார். நிகழ்வில் விசுவாசம், ஐயப்பன், கிருஷ்ணன், மாடசாமி, பீட்டர், யாக்கோபு, கருப்புசாமி பாண்டியன், உள்பட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.முன்னதாக கழக கொடி ஏற்றப்பட்டது.

### முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

# மதுரை கிழக்கில் - மாட்டுவண்டி, குதிரை பந்தயம் போட்டி!

## மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.மூர்த்தி துவக்கி வைத்தார் - மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் பங்கேற்பு!

மதுரை, ஆக.28-

மதுரை வடக்கு மாவட்டம் மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மாபெரும் மாட்டுவண்டி மற்றும் குதிரை வண்டி பந்தயத்தை மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமை ஏற்று துவக்கி வைத்தார். மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணி மாறன் முன்னிலை வகித்தார். அதன் விபரம் வருமாறு:

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா தினத்தை முன்னிட்டு மதுரை கிழக்கு தொகுதி திமுக சார்பாக மாபெரும் மாட்டு வண்டி பந்தயம் மற்றும் மதுரை மாவட்டத்தில் இதுவரை பல ஆண்டுகளாக நடைபெறாமல் இருந்த பொதுமக்கள் மற்றும் பந்தய ஆர்வலர்களின் மிகுந்த எதிர்பார்ப்பான மாபெரும் குதிரை வண்டி பந்தயம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இப்போட்டிகளை மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையேற்று இரு வண்ணக் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன், வடக்கு மாவட்ட துணைச் செயலாளர், ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., முன்னிலை வகித்தார்கள்.

மதுரை மேற்கு ஒன்றிய செயலாளர் (வடக்கு ஒன்றியம்) சி.சிறைச்செல்வன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன், மாவட்ட பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், மாநில இலக்கிய அணி நேருபாண்டியன், செயற்குழு உறுப்பினர்கள் வடிவேல் முருகன், சேகர், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வீரராகவன், வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வக்கீல் கலாநிதி, மாவட்டத் துணைச் செயலாளர் ஆசை கண்ணன், ஒன்றிய செயலாளர்கள் எஸ்.மதிவாணன், ஹக்கீம், பகுதி செயலாளர் மருது பாண்டியன், பெ.சசிகுமார், பாண்டியராஜன், பொதுக்குழு உறுப்பினர் கே.பி.பூமிநாதன், மாவட்ட அறங்காவல் குழு தலைவர் ரவிச்சந்திரன், ஜெயக்குமார், மாவட்ட பிரதிநிதி பி.அழகுபாண்டி, அம்மன் ஸ்டீல் எஸ்.இருளப்பன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தார்கள்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற பெரிய மாட்டு வண்டி, சின்ன மாட்டு வண்டி மற்றும் குதிரை வண்டி ஆகியவற்றிற்கு முதல் பரிசாக 2 லட்சத்து 101, முதல் ரூபாய் ஒன்றரை லட்சத்து 101, ரூபாய் ஒரு லட்சத்து 101, ரூபாய் 50 ஆயிரத்து 101, ரூபாய் ஒரு லட்சத்து 101, ரூபாய் 75 ஆயிரத்து 101, ரூபாய் 50 ஆயிரத்து 101, ரூபாய் 40 ஆயிரத்து 101 என சுமார் ஒன்பது லட்சம் ரூபாய் ரொக்க பணமாக பரிசாகவும், மேலும் நாட்டு பசு கன்றுடன் கூடிய பசுமாடு ஆறுதல் பரிசு என பல்வேறு பரிசுகளும், குத்துவிளக்கு நினைவு பரிசு என பரிசு மழைகளாக மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.மூர்த்தி வழங்கி சிறப்பித்தார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் ஒத்தக்கடை சரவணன், ஆலாத்தூர் ராஜவேல், பூங்கொடி மலைவீரன், பால ராஜேந்திரன், தனராஜ், திருப்பாலை ராமமூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர், திரளான பொதுமக்கள் பங்கேற்றார்கள். நிகழ்ச்சியில் மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் கார்த்திக் ராஜா, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஆதிசங்கர், நாகேந்திரன் நன்றி தெரிவித்தனர்.



நெல்லை கிழக்கு மாவட்டம் வள்ளியூர் வடக்கு ஒன்றியம் சார்பில் கண்ணநல்லூரில் கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் மூன்றாண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டம் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் வழிகாட்டுதலின்படி ஒன்றிய செயலாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தலைமைக் கழக பேச்சாளர் கடையநல்லூர் இஸ்மாயில் பங்கேற்று உரையாற்றினார். நிகழ்வில் சேக் பீர்மைதீன், ராமசாமி, காதர்மைதீன், துரை நடராஜன், முத்துக்குமார், சிவா,சுரேஷ், வேலு, அசன்மைதீன், திலகர், விசாலாட்சி, சாதிக் அலி, மாகின் அபுபக்கர், லியாகத் அலிகான், இக்பால், ராஜேஸ்வரி, மலர்விழி, உட்பட கழகத்தினர் பொதுமக்கள் கலந்து கொண்டனர். நிகழ்வின் முன்னதாக கழக கொடி ஏற்றப்பட்டது.

### விழுப்புரம் வடக்கு மாவட்டம்

# திண்டிவனம் தொகுதியில் செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் அறிவிப்பு!



விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் தொகுதியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் கலந்து கொள்ளும் செயல்வீரர்கள் கூட்ட நிகழ்ச்சி வருமாறு:

| வ. எண் | நாள் | நேரம் | ஒன்றியம் | இடம் | கூட்ட ஏற்பாடு |
|---|---|---|---|---|---|
| 1 | 01.09.2024 | காலை 10.00 மணி | மரக்காணம் பேரூர் | மரக்காணம் M.J.R திருமண மண்டபம் | திரு.A.ரவிக்குமார் மரக்காணம் பேரூர் கழக செயலாளர் |
| 2 | 01.09.2024 | பகல் 12.00 மணி | மரக்காணம் கிழக்கு | மரக்காணம் M.J.R திருமண மண்டபம் | திரு.R.தயாளன் மரக்காணம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் |
| 3 | 01.09.2024 | மாலை 5.00 மணி | மரக்காணம் மத்தியம் | சிறுவாடி A.M.S திருமண மண்டபம் | திரு.V.ரவிச்சந்திரன் மரக்காணம் மத்திய ஒன்றிய கழக செயலாளர் |
| 4 | 02.09.2024 | காலை 10.00 மணி | ஒலக்கூர் கிழக்கு | பாங்கொளத்தூர் பச்சைவாழியம்மன் கோவில் திருமண மண்டபம் | திரு.G.சொக்கலிங்கம் ஒலக்கூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் |
| 5 | 02.09.2024 | மாலை 4.00 மணி | மரக்காணம் மேற்கு | ஓமந்தூர் பிரவாஸ் பேலஸ் | திரு.A.பழனி மரக்காணம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் |
| 6 | 05.09.2024 | மாலை 4.00 மணி | திண்டிவனம் நகரம் | திண்டிவனம் ஆரியாஸ் மினி மஹால் | ஆசிரியர் திரு.M.கண்ணன் திண்டிவனம் நகர செயலாளர் |

மேற்கண்ட அனைத்து செயல்வீரர்கள் கூட்டங்களிலும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார். கூட்டத்தில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1. கழக முப்பெரும் விழா, 2. கழக ஆக்கப் பணிகள்

**டாக்டர் ப.சேகர்**
மாவட்டப் பொறுப்பாளர்
விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

# கனமழையால் முடங்கிய குஜராத்!

அகமதாபாத்,ஆக.28-


குஜராத் மாநிலத்தில் கடந்த 2 நாட்களாகப் பெய்து வரும் கனமழை காரணமாக அங்கு பல பகுதிகளும் வெள்ளக்காடாக காட்சியளிக்கிறது. இன்னும் 2 முதல் 3 நாட்களுக்கு கனமழை தொடரும் என இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ள நிலையில், மோர்பி மாவட்டத்தில் டிராக்டர் ட்ராலி ஒன்று 7 பேருடன் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. அந்த 7 பேரையும் தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் இந்த மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மழை வெள்ளத்தால் பாதிப்படையக்கூடிய தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்துமாறு முதல்வர் பூபேந்திர பாட்டீல் உத்தரவிட்டுள்ளார். தெற்கு குஜராத்தில் உள்ள வல்சட், தபி, நவ்ஸாரி, சூரத், நர்மதா, பஞ்சமஹாத் போன்ற பகுதிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## அன்பில் பொய்யாமொழி

### ஆகஸ்ட் 28 (1999)



**திராவிட இயக்க முன்னணித் தலைவர்களில் ஒருவரான அன்பில் தர்மலிங்கம் அவர்களின் புதல்வர்.**

**தி.மு.க. இளைஞர் அணி தொடங்கப்பட்ட நாளிலிருந்தே அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்தவர்.**

**1989–91 மற்றும் 1996–99ஆம் ஆண்டுகளில் சட்டப் பேரவை உறுப்பினராகப் பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**